[1979 மார்ச் 3

திரு.மு.கருணாநிதி: அரசாணை எண்கள் 410 என்பது என்ன 106 என்பது என்ன, 294 என்பது என்ன என்றே புரியவில்லை. அதை விளக்கினால் துணைக் கேள்விகள் கேட்க சாதமாக இருக்கும்.

மாண்புமிகு திரு.கா.காளிமுத்து: 23-2-1973 தேதியிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை எண் 410ல் டிப்ளமா தகுதி பெற்றவர் சென்னை மாநகராட்சியில் 10 வருடங்கள் ஓவர்சீயராகப் பணிபுரிந்தால் அவர்களை சூபர்வைசராக பதவி உயர்த்தலாம். டிப்ளமா தகுதியில்லாதோர் ஓவர்சியராகவே தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து கணக்கு ஆய்வாளர் இம்மாதிரி பதவி உயர்வு பெறுவது உயர்வினைக் குறிக்காது. வெறும் பதவி மாற்றத்தைத்தான் குறிக்கும். ஆகையால் உயர்வு ஊதியம் பெற முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். இது அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளது.

22-2-1977 நாளிட்ட பொதுப்பணித்துறை அரசாணை எண் 294ல் பொதுப்பணி நெடுஞ்சாலை நிலைமைப்பணி துறைகளில் இருக்கும் மேற்பார்வையாளர் பதவியை இளநிலை பொறியாளர் என்றும், இளநிலை பொறியாளர் பதவியை உதவிப் பொறியாளர் என்றும் மாற்றி உத்தரவிட்டது. இவ்வுத்திரவை அடிப்படையாக கொண்டு 22-6-78 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை எண் 954ல் சென்னை மாநகராட்சியிலுள்ள மேற் பார்வையாளர் பதவியை இளநிலைப் பொறியாளர் என்றும் இளநிலைப் பொறியாளர் பதவியை உதவிப் பொறியாளர் என்றும் மாற்றி உத்திரவிட்டுள்ளது.

22-1-1977 நாளிட்ட பொதுப்பணித் துறை அரசாணை எண் 106 மேற்பாவையாளர் பதவிக்கு சம்பளம் விகிதத்தை உயர்த்த ஆணை பிறபித்துள்ளது. இதற்கேற்ப மாநகராட்சியில் உள்ள மேற்பார்வையாளர் பதவிக்கான சம்பள விகிதத்தை மாற்ற அரசு பரிசீலித்து வருகிறது.

அடையாறு பகுதியில் சலவைத் துறை அமைத்தல்.

* வினா எண் 206 திரு. டி. கே. கபாலி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை, அடையார் சலவையார்புரம் பகுதியில் டோபி கானா கட்டுவதற்கு குறிப்பேதும் ஆய்வில் இருந்ததா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1979 மார்ச் 3]

திரு. டி. கே. கபாலி: சலவையார்புரம் பகுதியில் டோபி கானா கட்டுவதற்கு கலைஞர் ஆட்சிக் காலத்தில் நிலம் ஒதுக்கப் பட்டது. தற்போது அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அங்கே மாநகராட்சி நிலம் இல்லை. ஆகவே, வேறு இடத்தில் நிலம் வாங்கி புதிதாகக் கட்ட வேண்டுமென்று ஆணையாளர் அரசுக்கு எழுதி அனுப்பி யிருக்கிறார். அரசு அதைத் பரிசீலித்து வருகிறது.

திரு. டி. கே. கபாலி: அங்கே வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அரசு அதை வாங்கி உடனடி யாக டோபிகானா கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதுதான் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அ. செல்வராசன்: வட சென்னையில் ராபின்சன் பூங்காவில் இருக்கும் டோபிகானா மோசமான நிலைமையில் இருக்கிறது. அதை உடனடியாகப் பழுது பார்க்க அரசு உத்தர விடுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதை முதலில் அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திசையன்விளை குடிநீர்த் திட்டம்.

* வினா எண் 207—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் உள்ள திசையன்விளை பேரூராட்சி பகுதிக்கு குடிநீர்த் திட்டம் ஏதேனும் ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் தற்போது அத்திட்டத்தின் நிலை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின் ஆய்வுப் பணிகள் முடிவடைந்து அதற்கான உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.